# சாவகச்சேரி சந்தைப் பகுதியில் ஹெலிச் சூடு;

# 10 பேர் மரணம்; 14 பேர் படுகாயம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரி பொதுச்சந்தையில் நின்ற பொதுமக்கள்மீது நேற்று பிற்பகல் 2-30 மணியளவில் ஹெலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கலிபர்த் தாக்குதலால் பத்துப் பேர் உயிரிழந்தனர்; பதினான்கு பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் சின்னையா கந்தராசா (40 வயது சாவகச்சேரி) கே. லட்சுமணன் (12 வயது சாவகச்சேரி) எஸ். முத்துப்பிள்ளை (வயது 57 மீசாலை)எ. கெங்கேந்திரன்(வயது 30 சாவகச்சேரி) இராமகிருஷ்ணன் (வயது 50 சாவகச்சேரி) என். பஞ்சபாக்கியம் (வயது 30 மிருசுவில்) மகேஸ்வரி (வயது 57 மீசாலை) சிறீபாஸ்கரன் (வயது 25 சாவகச்சேரி) இவரின் சகோதரர் சிறீரங்கன் (வயது 14) ஆகியோருடன் பெயர் அறியப்படாத சுன்னாகத்தைச்சேர்ந்த மரக்

(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸ்ரீ புரட்டாதி மீ 24 உ புதன்கிழமை (10 - 10 - 1990) ஹிஜ்ரீ 1411 ரபி. அப். 20 ஓசை 235

## உலர் உணவு நிவாரணம் நிறைகுறைவாக விநியோகம்

### விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி தகவல்

(யாழ்ப்பாணம்)
தற்பொழுது பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணத்தில் ஒவ்வொரு பொருட்களிலும் நிறை குறைவாக வழங்கப்பட்டு வருவதாக பாவனையாளர் பாதுகாப்பு விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி தகவல் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைக்க —

# இராணுவத்தின் சடலங்களை

# செஞ்சிலுவை கையேற்பு

(பருத்தித்துறை)
சிங்கள மக்களுக்கு தமது மனிதாபிமானத்தையும், நல்லெண்ணத்தையும் வெளியிடும் பொருட்டு கோட்டை முகாம் பகுதியில் கைப்பற்றப்பட்ட பன்னிரெண்டு சிறிலங்கா இராணுவத்தினரின் சடலங்களை சிறிலங்கா அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்காக விடுதலைப்புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் நேற்றுமாலை கையளித்தனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட செயலகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட இந்த பன்னிரெண்டு சிப்பாய்களின் உடல்களும் வல்லைவெளியூடாக பருத்தித்துறை இறங்குதுறைக்கு கொண்டு செல்லப்பட்டது அங்கு சரியாக ஆ" பதினைந்து மணியளவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சனேயர் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை ஆகியோரால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ''பெட்ரோ'' விடம் கையளிக்கப்பட்டது. இச்சடலங்களைக் கையளிக்கத் தாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி கிரனைட் வீச்சால் வீடுசேதம்

(தையிட்டி)
நேற்று முன்தினம் (8.10.90) 12.30 மணியளவில் தையிட்டிப் பகுதியில் ஹெலியிலிருந்து கிரனைட் வீசப்பட்டதில் வீடு

(4ஆம் பக்கம் பார்க்க)

## பலாலிகாங்கேசன் பகுதியில் பரவலான ஹெலிச்சூடு

நேற்றுக்காலை 11 மணி முதல் 6 மணிவரை தையிட்டி, கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கட்டுவன், அளவெட்டி, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் ஹெலி பரவலாக வேட்டுகளைத் தீர்த்தது.

இதில் மாவிட்டபுரம் பகுதியில் 4 வீடுகள் சிறிது சேதம

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தாக்குதலுக்கு 2 ஊர்காவற்படை பலி

(திருமலை)
திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள கொறவப்பொத்தானைக்கும் சாந்திபுரத்திற்கும் இடையில் நேற்றுக்காலை எட்டு மணியளவில் சிங்கள ஊர்காவற்படையினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதலைமேற்கொண்டனர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழகவிரிவுரைகள் நவம்பர் 5இல் ஆரம்பம்

(அலுவலக நிருபர்)
யாழ்.பல்கலைக் கழகத்தின் கலை, விஞ்ஞான, மருத்துவ பீடங்களிற்கான விரிவுரைகள் அடுத்த மாதம் ஐந்தாம்

(4ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியாவிற்கு அப்பால் செல்ல

## பொதி சுமக்கும் வாகனங்களும் அனுமதி பெறவேண்டும்

(யாழ்ப்பாணம்)
அனைத்து வாகன உரிமையாளர்களும் வடபிராந்திய பொதி சுமக்கும் வாகனப் போக்குவரத்துச் சங்கத்தால் வழங்கப்படும் வரிப்பற்றுச்சீட்டுடன் அனுமதி அட்டையையும் பெற்றே வவுனியா மாவட்டத்துக்கு அப்பால் செல்ல வேண்டுமென வடபிராந்திய பொதிசுமக்கும் வாகன

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்லும் பயணிகளுக்கு

# புதிய அனுமதி ஒழுங்கு அறிமுகம்

(யாழ்ப்பாணம்)
வவுனியா மாவட்டத்திற்கு அப்பால் கல்விபயிலும் மாணவர்கள், மற்றும் அரச, தனியார் நிறுவன ஊழியர்கள் தாம் பிரயாணம் செய்யும் காரணத்தை விளக்கி அப்பகுதி சிற்றூரவையினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை அப்பகுதிப் பிரதேசப்பொறுப்பாளரிடம் சமர்ப்பித்து பிரயாணஅனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என பிரயாணிகள் அனுமதிப்பத்திரம் தொடர்பாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

மேலும் அவ்வறிக்கையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நிரந்தரமின்விநியோகத்திற்கு பல மாதங்கள் செல்லும்

(யாழ்ப்பாணம்)
யாழ். மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான தற்காலிக, நீண்டகால திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான உதிரிப்பாகங்கள், செலவீனங்கள், திட்டத்தை நிறைவு செய்ய தேவையான காலம் என்பன அடங்கிய விரிவான அறிக்கை ஒன்றை மின்சாரசபையின் உதவிப் பொது முகாமையாளர் தயாரித்து உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இத்திட்டத்தின்படி தற்காலிக திட்டத்தை நடைமுறைப் படுத்த இருவாரங்களும் நீண்ட காலத்திட்டத்தை நடைமுறைபடுத்துவதில் பிரான்சில் இருந்து மின்மாற்றிகளையும் மற்றும்உதிரிப்பாகங்களையும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரி தேவைக்கு பணம் ஒதுக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை உடனடியாகத் திறப்பதற்கு ஏதுவாக கட்டிடங்களைத் திருத்துவதற்கும், தேவையான உபகரணங்களைப் பொருத்துவதற்கும் மருந்துப் பொருட்களின் வழங்கலைப் பெறுவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிரசைகள் குழு சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவைக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு எழுதப்பட்ட மேற்படி கடிதத்தில் சம்பந்தப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## 104 மிதிவெடிகள் புலிகளால் மீட்பு

தம்பாட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

# தொழிலாளருக்குள் தகராறு; கத்திக்குத்துக்கு ஒருவர் பலி

(பருத்தித்துறை)

இரண்டு தொழிலாளர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறினால்ஒருவர் மற்றவரைக் கத்தியால் குத்திக்கொலை செய்துள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இக்கத்திக்குத்துச் சம்பவம் பருத்தித்துறை புலோலி தெற்கு சாரையடி என்னும் இடத்திலேயே நிகழ்ந்துள்ளது. ம. ஞானமுத்து (வயது 60) என்பவரே கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டவராவர்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வந்துள்ளதாவது;

கொலையுண்ட ஞானமுத்து என்பவருக்கும் ஊர்காவற்றுறையிலிருந்து சாரையடிக்கு வந்து திருமணம்செய்திருந்த செல்லத்தம்பி என அழைக்கப்படும்விஜயேந்திரன் (வயது 40) என்பவருக்கும் இடையே தகராறு ஏற்பட்டிருந்ததாகவும், இத்தகராறினால் கோபங்கொண்ட விஜயேந்திரன் கொலையுண்ட ஞானமுத்து என்பவருக்குக் கத்தியால் நெஞ்சில் குத்தியதாகவும், காயங்களுக்குள்ளானவர் உடனடியாகப பருத்தித்துறை அரசினர் வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டதாகவும் அங்கு அவர் இறந்துவிட்டது தெரிய வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்கொலைபற்றி தமிழீழவிடுதலைப்புலிகளிடம் புகார்செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கத்தியால் குத்திய விஜயேந்திரன் என்பவர் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு 1 — 2 — 1944

அழிப்பு 14 — 10 — 1987

### திரு. சின்னப்பு சண்முகசுந்தரம்

(மின்னிணைப்பாளர் - யா. மா. ச)

திதி: 10 - 10 - 1990

ஆண்டு மூன்று ஓடி மறைந்தாலும்
ஆறாதே எங்கள் துயர்
பாவிகள் எங்களைத் தனியே
பாழும் உலகில் தவிக்கவிட்டு
ஏன் சென்றீர்கள் உங்கள் நினைவால்

49/1 வில்வந்தரு வீதி,
அரியாலை.

ஏங்கித்தவிக்கும்
மனைவி, பிள்ளைகள்

(B-1483)

## வரிவிளம்பரம்

### டில்கா வாச் வேக்ஸ் (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக் கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு.

(B-1444)

### நியூ வீனஸ் NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றிகளும் விற்பனைக்குண்டு.

(B/1470 )

## அறிவித்தல்

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

இன்று (10 – 10 - 90) புதன் கிழமை தொடக்கம் சமாசத்தின் சகல ஊழியர்களும் 3 ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தில் உள்ள தலைமைக் காரியாலயத்திற்குத் தவறாது கடமைக்கு வருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்
வைத்திய கலாநிதி ஏ. எல். ஏபிரகாம்
தலைவர்
வ. மா. க. தொ. கூ. ச. சமாசம்
யாழ்ப்பாணம்

(R-717)

## பொதுக் கூட்டம்

(கொழும்புத்துறை)

தமிழ் மாநில அகதிகள் பாதுகாப்பு மன்றத்தின் முதலாவதுபொதுக்கூட்டம்இன்று புதன் கிழமையன்று கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலய திடலில் மாலை 4 மணியளவில் நடைபெறவுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபைக்கும், ஜெனிவா தலைமைக் காரியாலயத்துக்கும் அனுப்பி வைத்த மகஜர்களின்படி எந்த ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கையையும் அகதி மக்கள் சார்பாக எடுக்கப்பட வில்லை என்பதைக் கண்டித்தும் 5 லட்சம் தமிழ் மக்களின் கையெழுத்து மகஜர் மக்கள் பிரசார மேடைகள் மூலம் பெறுவதற்கும் இந்தப் பொதுக்கூட்டம் இம்மன்றத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகல பொதுமக்களும் இதில் பங்கு கொள்ளுமாறு இதன் அமைப்பாளர் திரு. சி. கஜேந்திரநாத் அழைப்பு விடுக்கிறார். (24)

## புதிய உயர் கல்லூரி

### எமது நிறுவன மாணவர் கவனத்திற்கு

G.A.Q, B.A. பரீட்சை விண்ணப்பப் படிவங்களை எமது நிறுவனத்தில் 10-10-90 காலை 9 மணி முதல் 11மணிக்கிடையில் பெற்றுக் கொள்ளவும்.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(B/1482)

## அறிவித்தல்

### திருக்கோணமலை பத்திரகாளி அம்மன் கேதார கௌரி விரத காப்பு விநியோகம்

திருக்கோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்மன் கோயில் கேதார கௌரி விரத காப்பு இம்முறை மக்களின் வசதிகருதி திருக்கோணமலையில் இருந்து கொண்டுவரப்பட்டு கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோயிலில் 18 - 10 - 1990 வியாழக்கிழமை காலை 8.00 மணிப் பூசையைத் தொடர்ந்து காப்பு வழங்கப்படும். அடியார்கள் முன்கூட்டியே வந்து பதிவு செய்து கொள்ளவும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

P. கிருஷ்ணமூர்த்தி சர்மா,
இலங்கை நாயகி அம்மன் கோயில்,
கல்வியங்காடு,
நல்லூர்.

தகவல்:
பத்திரகாளி அம்மன் கோயில்,
ஆதீனகர்த்தா,
சோ. ரவிச்சந்திரக்குருக்கள்.

(R/715)

## பேரவைக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விஷேட ஆட்சிக் குழுக் கூட்டம் நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

அத்தருணம் உலக உயிர் பாதுகாப்பு வாரம் பற்றிய கலந்துரையாடல் இடம் பெறும். (24)

## பொதுக்கிணற்றை தவிர்க்கும படையினர்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் தற்போது பொதுககிணற்றில் தண்ணீர் எடுப்பதை நிறுத்திக் கொண்டுள்ளனர். இதே வேளை வீடுகளில் உள்ள கிணறுகளில் தண்ணீர் எடுக்கின்றனர்.

அந்த வீட்டு உரிமையாளர் தொடர்ந்து அங்கு நிரந்தரமாக இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றனர்.

(தி)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



விரஜனனம் 1971 | 01 | 09

விரமரணம் 1990 | 08 | 26

### வீரவேங்கை ஜக்ஸன்

### பூபாலசிங்கம் சசிகரன்

ஒரு பூவின் பருவம் உனக்கு
தேசத்தின் நினைவுகள்
நிரம்பிய நெஞ்சினொடு
வேள்விநிலத்தின் யாகத்திற்கானவன்
விடுதலைப்புலிகளின் அரணில்
வாழிடம் உனக்கு களமானது
உன் மரணத்தில் நூற்றுவர் விழிப்பர்!

பச்சிலைப்பள்ளி வாழ் மக்கள்

(B-1478)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



படைப்பு 12 — 01 — 1970

அழிப்பு 05 — 10 — 1988

### வெற்றிவேலு - கருணாகரன்

(கௌசிகன் 2ஆவது லெப்ரினன்ட்)

கருணாகரன் எனப் பேரேபெற்றாய்
கருணாகரனாய் நீயே வளர்ந்தாய்
கௌசிகன் எனும் பெயரோடு
போராடச் சென்றாய்!
உடுப்புக் குளத்தில் நேரடி மோதலில்
இந்தியப்படை வெறியினர்
உன்மீது குண்டைப் பாய்ச்சினரே!
கருணா! கொலைகாரர்கள் அதை
வெற்றி என்று நினைத்தார்கள்
அங்கேதான் அவர்கள் தோற்றார்கள்

உன் இலட்சியம் நிறைவேற இறைவனை வேண்டுகின்றோம்.

செங்குந்தா வீதி
3ஆம் வட்டாரம்
முள்ளியவளை.

இங்ஙனம்
அப்பா அம்மா,
சகோதரர்கள், உறவினர்கள்.

(B/1475)

## சிந்தனைக்கு

*அரசியலில் நேர்மை, வலிமையிலிருந்து பிறப்பது; கபடம் பலவீனத்திலிருந்து பிறப்பது.*

- நிக்கலாய் லெனின்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 10-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## கோடரிக்காம்புகள்

இரண்டாயிரம் தமிழ் ஊர்காவற்படையினரை நியமிப்பதன் மூலம் மேலும் இன முரண்பாட்டையும், இன அழிவையும் மேற்கொள்ள சிறிலங்கா அரசாங்கம் திட்டம் தீட்டிச் செயலில் இறங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் இன்று அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு சிறிலங்கா அரசாங்கமே முழுக் காரணமாகும். சிறிலங்கா அரசின் முப்படைகளும், அரசாங்கத்தின் சட்டபூர்வமற்ற கொலைகாரக்கும்பல்களும், சட்டபூர்வமாக ஊர்காவற்படை என்ற போர்வையில் அரசாங்கத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட சிங்கள, முஸ்லிம் குண்டர்படைகளுமே இன்று கிழக்கில் நடக்கும் படுகொலைகளை நிகழ்த்துகின்றன.

இந்த நிலையில் தமிழரைப் பாதுகாக்க தமிழர் தரப்பில் இருந்து ஊர்காவற்படைக்கு ஆட் திரட்டுவது என்பது பிள்ளையைக் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டும் செயலாகும்.

சிறிலங்கா அரசாங்கம் கிழக்கில் இனங்களுக்கு இடையில் சமாதானம் நிலவ வேண்டுமானால் முதலில் ஓர் இனத்திற்கு எதிராக ஓர் இனத்தைப் பயன்படுத்தும் திரைமறைவுத் திட்டங்களைக் கைவிடவேண்டும். அடுத்ததாக ஆயுதப்படையின் படுகொலை நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதோடு சட்டபூர்வமற்றதும், இன ரீதியாக குண்டர்களுக்கும், சமூக விரோதிகளுக்கும் ஆயுதங்களை வழங்குவதை நிறுத்த வேண்டும்.

அதைவிடுத்து சிறிலங்கா அரசாங்கத்தின் இத்திட்டம் சிறுபான்மை இனங்களுக்கிடையில் மேலும் முரண்பாடுகளை வளர்த்து, இரு இனங்களையும் பலவீனப்படுத்தும் நடவடிக்கையாகும்.

அரசாங்கம் தெரிவிப்பது போல் கிழக்கில் தமிழர் ஊர்காவற்படையை நியமிப்பதன் மூலம் தமிழ்க் கிராமங்களைப்பாதுகாக்கமுடியுமா? கிழக்கில் இராணுவமும் சிங்கள, முஸ்லிம், 'ஊர்காவற் படையினரும்' அரசாங்கத்தின் மறைமுகக் கொலைகாரப்படையுமே தமிழ் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்துகின்றன; தமிழரைப் படுகொலை செய்கின்றன. இதனை தமிழர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் ஊர்காவற்படையினரால் தடுத்து நிறுத்தி கிராமங்களையும், மக்களையும் பாதுகாக்க முடியுமா? அதாவது தமிழ் ஊர்காவற்படையால் சிறிலங்கா இராணுவத்திற்கும், அவர்களுடன் உள்ள சிங்கள, முஸ்லிம் 'ஊர்காவற்படைகளுக்கும்' எதிராக ஆயுதங்களை பாவிக்கமுடியுமா?

அவ்வாறு ஆயுதம் பாவிக்கப்பட்டால் ஏற்படப்போகும் அழிவு தமிழ் ஊர்காவற்படைக்கா? தமிழருக்கா? அரசாங்கம் இதனை எந்த நோக்கில் பார்க்கப் போகிறது. முஸ்லிம் 'ஊர்காவற்படைக்கு' எதிராகஆயுதம் பாவிக்கப்பட்டால் மோதிக்கொள்ளப்போவது யார்?

மறுபுறமாக நோக்கும்போது தமிழரில் ஊர்காவற் படையினர் என்ற போர்வையில் ஆயுதம் யாருக்கு வழங்கப்படப் போகின்றது? தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்ட சமூகவிரோதக் கும்பல்களுக்கே வழங்கப்படப்போகின்றது. இவர்கள் தமிழர்பாதுகாப்பில் அக்கறை கொண்டவர்களாக இருந்ததில்லை என்பதற்கு கடந்த காலம்சான்று பகரும்.

வடக்கு - கிழக்கில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த காலத்தில் இச் சமூகவிரோதக் கும்பல்கள் எதைச் செய்தனவோ மீண்டும் அவ்வாறே சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பயன்படப்போகின்றன. இவர்களின் பிரதான நோக்கம் கொள்ளை, கொலை, காட்டிக் கொடுப்பு என்பனவாகும்.

அதாவது சிங்கள, முஸ்லிம், ஊர்காவற்படையினர் தமிழர்மீது மேற்கொண்ட அடக்குமுறை இவர்கள் மூலம் மேற்கொள்ளப்படப் போகின்றது. இவர்கள் ஒருபோதும் 'ஊர்காவற்படையாக' இருக்கப் போவதில்லை. தமிழருக்குள் உளவுப் படையாகவே இருப்பார்கள்.

# புகையிரத ஊழியர்களுக்கு நான்கு மாத சம்பளமில்லை

(கொழும்புத்துறை)

அனுராதபுரம் ரயில்வேநிலையத்தில் கடமையாற்றி வந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அனேக ஊழியர்களுக்கு கடந்த நான்கு மாதங்களாகச் சம்பளம்கிடைக்கவில்லை.

இந்த ஊழியர்கள் இங்கு வந்து தற்போது வெளிமாவட்ட அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர்.

நான்கு மாத வேதனமும் இன்றிப் பலத்த சிரமத்தின் மத்தியில் இவர்கள் வாழ்க்கை நடாத்துவதாக அங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவர் எமது நிருபருக்கு தெரிவித்துள்ளார். (24)

# சீன - இந்திய யுத்தமும் ஈழ - இந்திய யுத்தமும்

**சாரணன்**

இலங்கை - இந்திய ஒப்பந்தம் (1987) இந்தியாவிற்கு கிடைத்த ஒரு மிகப்பெரும் வெற்றியெனவும், அது தமது இராஜதந்திரத்தின் உச்சக்கட்டம் எனவும் ராஜீவ் அரசாங்கம் தனது தோளில் தானே தட்டிக் கொண்டது. அந்த ஒப்பந்தத்தை அமுலாக்குவதற்கென ஓர் 'அமைதிப்' படையை இலங்கைக்கு அனுப்பியதாகவும் ராஜீவ் அரசாங்கம் மேலும் கூறியது.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன என்பதை கடந்த ஜூன்மாத 'லங்கா காடியன்' சஞ்சிகையில் வெளியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பேட்டி அம்பலப்படுத்துகிறது.

கடலில்கைதான குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 விடுதலைப் புலிகளையும் கொழும்புக்கு கொண்டுவருமாறு தான் ஆணையிட்டமை ஓர் ஒப்பந்த மீறல் என்பதை அப்பேட்டியில் ஜே ஆர். ஒப்புக்கொள்கிறார். மேலும் விடுதலைப் புலிகள் ''ஒருவகை மிருகம்'' என்றும், அவர்களை அழித்தொழிக்க வேண்டும் என்பதில் தான் ஆரம்பத்திலிருந்தே அக்கறையாக இருந்ததாகவும் அதன் பொருட்டே தான் ஒப்பந்தத்தை மீறும் வகையில் நடந்துகொண்டதாகவும் கூறியுள்ளார். ஒப்பந்தத்தை ஜே. ஆர். தானே மீறிய அதே வேளை விடுதலைப் புலிகளுடன் இந்திய இராணுவத்தை மோதவிட்டது தனது சாமர்த்தியமே என்ற தோரணையில் அப்பேட்டி அமைந்திருந்தது.

அப்படியாயின் ஜே. ஆரிடம் ஏமாந்தது ராஜீவ் அரசாங்கமும் இந்தியாவுமே தவிர ராஜீவிடம் ஏமாந்தது ஜே. ஆர். அரசாங்கமும் இலங்கையும் அல்ல என்பது புலனாகிறது. எனவே இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்தியாவின் இராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றியல்ல; அது இந்தியாவிற்கு என்றும் காலத்தால் அழியாத அவமானமும் தோல்வியுமாகும்.

'அமைதிப்படை' இலங்கைக்கு வந்தது ஒப்பந்தத்தை அமுலாக்கவென்றால், ஒப்பந்தத்தைஜே.ஆர். மீறியபோது ஜே. ஆர். அரசாங்கத்திற்கு எதிராகவல்லவா 'அமைதிப் படை' செயற்பட்டிருக்க வேண்டும்?

திலீபனை இந்திய அரசு மரணிக்க விட்டபோது தாங்க முடியாத வேதனையும், இந்தியா மீதான வெறுப்பும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் குடிபுகுந்தன. ஒப்பந்தப்படி பன்னிருவரையும் பாதுகாக்க இந்திய அரசு தவறியபோது தமிழ் மக்கள் இலங்கை, இந்திய அரசுகளுக்கு எதிராகச் சீற்றம் கொண்டனர். ஆயினும் ''அமைதிப்படைக்கு'' எதிராக விடுதலைப் புலிகள் முதலில் ஆயுதம் தூக்கவில்லை. ஆனால் 'அமைதிப் படைதான் புலிகளின் 'நிதர்சனம்' ஒளிபரப்புக் கருவிகளை பலாத்காரமாக நீக்கியும், ஈழமுரசு, முரசொலி ஆகிய பத்திரிகைக் காரியாலயங்களுக்கு குண்டுவைத்து தகர்த்தும் தமது இராணுவ நடவடிக்கையை தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடக்கி வைத்தது.

உண்மை இவ்வாறிருக்க, குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு புலிகள் மாண்ட துயரம் ஒரு புறம், இவர்களை இலங்கை அரசு பலியிட்ட கொடுமை மறுபுறம், ஒப்பந்தத்தை மீறி பன்னிருவரையும் பலியிட்ட அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய 'அமைதிப்படை' போராளிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட அநாகரிகம் இன்னொரு புறமாக இருந்த இந்த வரலாற்று வேதனை உலக வரலாற்றில் என்றும் அழிக்கப்பட முடியாத பெருங்கறையாக இலங்கை, இந்திய அரசுகளின் முதுகுகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

(தொடரும்)

# மதத்தின் பெயரால் நடைபெறும் வன்முறையை அரசு அனுமதிக்காது

## வி. பி. சிங்

(டில்லி)

இந்தியாவில் மதத்தின் பெயரால் நடைபெறும் எந்த வன்முறையையும் இந்திய அரசு அனுமதிக்காது என இந்தியப் பிரதமர் வி. பி. சிங் உறுதியாக அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பட்னாவில் இடம் பெற்ற பேரணி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் வி. பி. சிங் இவ்வாறு கூறினார்.

ராம ஜன்ம பூமி, பாபர்-மசூதி பிரச்சினை தொடர்பாக உயர் நீதிமன்றம் எடுக்கும் முடிவே அரசின் முடிவு என்று திட்டவட்டமாக கூறிய வி. பி. சிங், அதனை மக்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

மேலும் பொருளாதாரத்தில் பலவீனம் உற்றிருக்கும் பிரிவினர்க்கு பாராளுமன்றத்திலும் மாநில சட்டப் பேரவையிலும் 40 வீதம் இட ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும் அது தொடர்பாக நாடு தழுவிய விவாதம் நடத்தப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## கர்நாடகத்தில்

# வகுப்புவாத வன்முறையில் 40 பேர் மரணமாயினர்

(பெங்களூர்)

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் கடந்த சில நாட்களாக இடம்பெற்ற வகுப்புவாதக்கலவரங்களில் குறைந்தது 40பேர் வரையில் உயிர் இழந்துள்ளனர் என கூறப்படுகிறது.

பாதுகாப்புநடவடிக்கையின் பொருட்டு மாநில அரசு அண்டை மாநில அரசுகளிடம் இருந்து பொலிஸ் உதவியினைக் கோரியுள்ளது.

இதேவேளை இந்திரா காங்கிரஸ் தலைமையில் இருக்கும் இந்த மாநிலத்தில் 12 அமைச்சர்கள் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளனர். 18 அமைச்சர்களையும் முதலமைச்சரவையையும் கொண்ட இந்த மாநில சட்டசபை ஆட்டம்கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# ஜெருசலேத்தில் துப்பாக்கிச்சூடு 20 பலஸ்தீனியர்கள் பலி

(ஜெருசலேம்)

ஜெருசலேத்தின் கிழக்குப் பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இருபதுக்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்குக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

புதிய மதக்கட்டடம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டுவது தொடர்பான பிரச்சினை குறித்து இந்த வன்செயல் மூண்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

இஸ்ரேலியப் பொலிசார் பாலஸ்தீனியர் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இந்த உயிர் இழப்புக்கள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின், கூட்டுத்தாபன கூட்டுறவு வர்த்தக சேவையாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை காலை9. 30மணிக்குமூன்றாம் குறுக்குத் தெருவில் உள்ள மேற்படி சமாசத்தின் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு ஊழியர்கள் அனைவரையும்தவறாது சமுகமளிக்குமாறு சீ சீ.எம்.யு தலைவர் கேட்டுக்கொள்கிறார். (மு)

# இலங்கைத் தமிழர் படுகொலைக்கு
# ராஜீவ் நடவடிக்கையே காரணம்

## -கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

இலங்கையில் இனப்பிரசினை மிக மோசமாவதற்கும் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கும் கடந்தகாலத்தில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி இலங்கை இனப் பிரச்சினை குறித்து மேற்கொண்ட நடவடிக்கைகள்தான் காரணம் என்று தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் நிருபர்கள் மத்தியில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு. கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாக தி. மு. கவை குற்றம் கூறும் இந்திரா காங்கிரசும் ராஜீவ்காந்தியும் ஒருபுறமும், தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் இந்த இரண்டு கட்சிகளும் நட்புக்கட்சிகளே ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தமிழகத்திற்கு வரும் அகதிகளை நல்ல முறையுடனும், பாதுகாப்புடனும் பேணுவேன் என்பதால்தான் அகதிகள் அதிகமாக இங்கு வருகிறார்கள் அதனால்தான் ராஜீவ்காந்தி தமிழகத்திற்கு அகதிகள் அதிகரிப்பதற்கு கருணாநிதிதான் காரணம் என்று கூறியிருப்பார் என்றும் தெரிவித்துள்ளார்.

### கூட்டணி எதிர்ப்பு

(சென்னை)

தமிழ் ஊர்காவற்படையினருக்கு ஆயுதங்கள் வழங்கக்கூடாது என இலங்கை அரசை தமிழர் விடுதலைக் கூட்டணி கேட்டுக்கொண்டிருக்கிறது.

இதற்குமுன்பு ஆயுதங்களை கீழே போடவேண்டும் எனக் கூறிய இலங்கை அரசாங்கமே ஆயுதக் கலாசாரத்தை ஊக்குவிப்பது விந்தையாக இருக்கிறது என அக்கட்சி மேலும் கூறியது.

### ஷெல்தாக்கி பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி முகாமில் இருந்து நேற்று ஏவப்பட்ட ஷெல் ஒன்று ஆனைக்கோட்டைப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் பலத்த காயம் அடைந்துள்ளார்.

திருமதி அருளானந்தம் (வயது 38) என்பவரே காயமடைந்துள்ளார். இவர் அவசர சிகிச்சைக்காக மானிப்பாயில் இயங்கும் போதனா மருத்துவ மனைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சுன்னாகம், கொக்குவில் போன்ற பலபகுதிகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. (க)

### சாவகச்சேரி

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கறிவியாபாரி ஒருவரும் இச்சம்பவத்தில் பலியானார். இவரதுசடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் மு. கனகம்மா (வயது 45 வேம்பிராய்) சி. சரஸ்வதி (வயது 44 மீசாலை) சி. சின்னமணி (வயது 45மந்துவில்) கே. யோகராசா (வயது 24 சாவகச்சேரி) சுப்பிரமணியம் (வயது 14 சாவகச்சேரி) சி. முத்துவேல் (வயது 40 கொடிகாமம்) நாகராசா (வயது 16 கல்வியங்காடு) கே. துரையப்பா (வயது 55 சாவகச்சேரி) கெங்காதரன் (வயது 78 சாவகச்சேரி) நந்தகோபால் (வயது 26) யோகம்மா (வயது 50) இராசலிங்கம் (வயது 46 சாவகச்சேரி) இராஜ்குமார் (வயது 22) புஸ்பராணி (வ்யது 23) ஆகியோர் காயமடைந்தவர்களாகும்.

இவர்கள் தற்போது மானிப்பாய் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். (றெ)

## யாழ். ஆஸ்பத்திரிக் கிளையில் ஒய்வூதியக் கொடுப்பனவு

(அலுவலக நிருபர்)

இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையூடாக ஒய்வூதியம் பெறுபவர்கள் இனறு புதன் கிழமை காலை 9மணிதொடக்கம் 9.30 மணிவரை தமது ஆவணி மாத ஒய்வூதிய வவுச்சரை வங்கிக் கருமபீடத்தில் நேரடியாகச் சமர்ப்பித்துப் பணக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம் என இலங்கை வங்கி மேல்தரக் கிளையின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

வங்கியில் ஆகக் குறைந்தது நூறு ரூபாத் தாள்களே இருப்பதனால் தமது பென்சன் தொகைக்கு ஏற்றவாறு மிகுதிப் பணத்துடனும், தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஆவணத்துடனும் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

வங்கியில் வைப்பிலிடப்படும் பணத்தொகைக்கேற்ப முதல் வருபவர்களுக்குமுதற்கொடுப்பனவு என்ற அடிப்படையில் வழங்கப்படும். அடுத்த கொடுப்பனவுபற்றி மீண்டும் அறிவிக்கப்படும். (மு)

## திருமலை மாவட்ட ஊழியர் பிரயாண ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடமைபுரியும் ஊழியர்களுக்கான பிரயாண ஒழுங்குகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும், வடபிராந்திய மினிபஸ் சங்கமும் ஒழுங்கு செய்துள்ளன.

சலுகைக் கட்டண அடிப்படையில் இவர்களுக்கான வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை பதிவு செய்யாத ஊழியர்கள் இன்று பகல் 12-00 மணிக்கு முன்பு நல்லூர் சாதனா பாடசாலையில் தமது பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.

அநேகமாக பிற்பகல் 4-00 மணிக்கு வாகனம் புறப்படக்கூடிய சாத்தியக்கூறு உண்டு.

அதேவேளை கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு சனிக்கிழமைக்கு முன்பாக சலுகைக் கட்டண வாகன ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். (லோ)

### நிரந்தர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறக்குமதி செய்து சுன்னாகம் கொண்டுவந்து சேர்ப்பதற்கு 14 மாதங்களும் பின்னர் அவற்றை பொருத்தி இயங்கவைப்பதற்கு மூன்று மாதங்களும் தேவைப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்ட அறிக்கைக்கு இதுவரை எந்த பதிலும் வந்து சேரவில்லை என தெரிகிறது. (க)

### பொதி சுமக்கும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துச் சங்கம் அனைத்து பொதி சுமக்கும் வாகன உரிமையாளருக்கும் அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளது. அத்துடன் அனுமதி அட்டை இன்றி பொதி சுமக்கும் எந்த ஒரு வாகனமும் வவுனியா மாவட்டத்துக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து பொதி சுமக்கும் வாகன உரிமையாளர்களும் ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### பல்கலைக்கழக

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதி ஆரம்பமாகும் என யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு. துரைராஜா தெரிவித்துள்ளார்.

சகல பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் குறித்த இத்திகதியில் விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதைவிட யாழ் பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட சகல டிப்ளோமா பட்டப் படிப்புகளுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு)

### பலாலி

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)


டைந்துள்ளன. 11 மணியளவில் மாவிட்டபுரம் வீதியில் ஹெலி சுட்டதில் 65 வயது வயோதிபருக்கு கையிலும் காலிலும் காயம் ஏற்பட்டது. அதே நேரம் 1 மணியளவில் பலாலியிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறிசெல் நான்கு சுன்னாகம் பகுதியில் ஒரு மைல் சுற்றாடலில் உள்ள வளவுகளில் வீழ்ந்து பலத்த சத்தத்துடன் வெடித்தது. இதனால் சுன்னாகப்பகுதியில் சிறிது நேரம் பதட்டம் காணப்பட்டது. (ச)

### உலர் உணவு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் ஒவ்வொரு நிறுத்தல் அளவைப் பொருட்களிலும் நூறுகிராம் வரையில் குறைவதாகவும் மக்கள் இலவசமாக இந்தப் பொருட்களை பெற்றுக் கொள்வதால் எந்தவித கவலையும் கொள்வதில்லை எனவும் அவ்வதிகாரி கவலை தெரிவித்தார்.

இறுதியாக போர்கால சூழ்நிலையில் மக்கள் ஏமாற்றப்படுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டுமென வேண்டிக் கொண்டார். (லோ)




### 104 மிதிவெடிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்த 104 மிதிவெடிகளை கடந்த ஞாயிறு, திங்கள் கிழமைகளில் விடுதலைப்புலிகள் மீட்டெடுத்துள்ளனர். இப்பகுதியில் மிதிவெடிகலை மீட்கும் பணியில்தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். (மு)

### கொழும்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஊழியர் ஆயின் சிற்றூர் அவையின் கடிதம் சமர்ப்பிக்க முடியாதவிடத்து திணைக்கள அடையாள அட்டையை அப்பகுதி பிரதேசப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்து பிரயாண அனுமதிப்பத்திரத்தைப் பெற முடியும்.

கணவன் மனைவி இருவரும் அரசஊழியர்களாயின் தமிழீழ மீட்புநிதி செலுத்திய பற்றுச்சீட்டு சமர்ப்பித்தே அனுமதி பெறவேண்டும். இவர்கள் தனிநபராயின மேற்படி பற்றுச்சீட்டு அவசியமில்லை.

கடும் சுகயீனமுற்றவராயின் வைத்தியரினால்வழங்கப்பட்ட சான்றுப்பத்திரத்தை சமர்ப்பித்து அனுமதிபெறலாம்.

இடம் பெயர்ந்தவர்கள் சொந்த இடம் திரும்பவேண்டுமாயின் விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணியினரின் அகதிகள்புனர்வாழ்வுப்பிரிவினரால் வழங்கப்பட்டகடிதம் அல்லது சிற்றூர் அவையினரிடம் இருந்து பெற்ற கடிதத்தை பிரதேசப் பொறுப்பாளரிடம் சமர்ப்பித்து அனுமதிப்பத்திரம் பெறலாம்.

அனைத்துப் பிரயாணிகளும் பிரயாணம் செய்வதற்காக அனுமதித்து பிரதேசப் பொறுப்பாளரால் வழங்கப்படும் அடையான அட்டையை வவுனியாவில் உள்ள எமது கண்காணிப்பு நிலையத்தில் ஒப்படைத்தாலே பயணத்தை மேற்கொள்ள அனுமதிக்கப் படுவர்.

மேலும் யாழ். மாவட்டத்தில் பிரயாணிகள் தமது பிரயாண பற்றுச்சீட்டை யாழ். முத்திரைச்சந்தையில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்துடன் நாளைமுதல் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களும் வடமராட்சி அல்லது சாவகச்சேரி மினிபஸ் சங்கத்தில் வாகன இலக்கம், பயணிகளின் எண்ணிக்கை போன்றவற்றை பதிவுசெய்த பின்னரே பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி விதிமுறைகள் அனைத்தும் நாளைமுதல் அமுலுக்கு வரும் எனவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### புலிகளின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தாக்குதலால் இரண்டு ஊர்காவற்படையினர் பலியாகினர்: இவர்களிடமிருந்து 303 றைபிள் 1, ரவைகள் 20, சொட்கண் 1, தோட்டா 2 ஆகியன கைப்பற்றப்பட்டன.

### ஹெலி கிரனைட்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று பலத்த சேதமடைந்துள்ளது.

வீட்டில் எவரும் இல்லாததினால் உயிர்ச்சேதம ஏதும் ஏற்படவில்லை. (ச)

## சமுகம் அளிக்கவும்

(அலுவலக நிருபர்)

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கியில் சகல கிளைகளிலும் வங்கி ஊழியர்களைத் தத்தமது கிளைகளிற்கு உடனடியாக சமூகமளிக்குமாறு இலங்கை வங்கியின் யாழ் மாவட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

### யாழ் ஆஸ்பத்திரி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் பணிப்புரை விடுப்பதன் மூலம் உடனடி நடவடிக்கை எடுக்கும் படி கேட்டிருக்கிறது.

அக் கடிதத்தில் மேலும் வைத்தியசாலைக்குத் தேவையான மண்ணெண்ணை, பெற்றோல், மற்றும் டீசல்போன்ற எரிபொருட்கள் கிடைக்கச் செய்யும் படியும், வைத்திய சாலைக்கு தடைப்படாத மின்சாரம் கிடைப்பதை உறுதிப்படுத்தும்படியும் கோரப் பட்டுள்ளது.

### இராணுவத்தின்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக இருப்பதாக விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்கதே.

இந்த பன்னிரெண்டு உடல்களையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்று கொண்டதாக செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதி பெட்ரோவும் கையளித்த அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சனேயரும் செஞ்சிலுவைச் சங்க முத்திரை பொறிக்கப்பட்ட தாளில் கையெழுத்து இட்டு அதில் விடுதலைப்புலிகளிடம் ஒரு பிரதியும் சர்வதேச செஞ்சிலுவை சங்க பிரதிநிதியால் ஒரு பிரதியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து பன்னிரு உடல்களும் மிதக்கும் தட்டு மனைகளில் ஏற்றப்பட்டு ''விங்கோ ரேடர்'' கப்பலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது இவ்வுடல்களுடன் பெட்ரோவும் கப்பலுக்குச் சென்றார்.

சிங்கள மக்களிடம் தமது மனிதாபிமானத்தையும் நல்லெண்ணத்தையும் தெரிவிக்க இச் சந்தர்ப்பம் பயன்படும் என எதிர்பார்ப்பதாக அரசியல்பொறுப்பாளர் ஆஞ்சனேயர் பெட்ரோவிடம் இந்த பன்னிரெண்டு உடல்களையும் கையளிக்கையில் கூறினார்.

ஆயிரக்கணக்கான பொது மக்களும் உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கும் முன்னிலையில் இந்த பன்னிரெண்டு சடலங்களும் செஞ்சிலுவை சங்க பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் விடுதலைப்புலிகளின் நல்லூர் பொறுப்பாளர் மோகன், அரியாலைப் பொறுப்பாளர் பகீன் ஆகியோரும் உள்ளூர் செஞ்சிலுவை சங்கபிரதிநிதி சுவாமிராஜ் ஆகியோரும் இவ்வைபவத்திற்கு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1990 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.